## சிறுவர் பராமரிப்பகம்/ பாடசாலைக்கு மீளச் செல்லுதல் - உறுதிப்படிவம்

உங்கள் பிள்ளை சிறுவர் பராமரிப்பகம்/பாடசாலைக்குத் திரும்பிச் செல்லக்கூடிய நிலையில் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தயவுசெய்து கீழேயுள்ள பெட்டிகளில் ஒன்றில் மட்டும் அடையாளமிடவும். உங்கள் கையொப்பத்தை இடுவதன் மூலம், இந்தத் தகவல்கள் உண்மை என்பதனை நீங்கள் உறுதிப்படுத்துகின்றீர்கள்.

மாணவர் பெயர்: ____________________________________________

### எனது பிள்ளை சுகவீனமாக இருந்தார்:

- ☐ எனது பிள்ளை COVID-19 க்குரிய PCR சோதனை மூலம் எதிர்மறையாகச் சோதிக்கப்பட்டார் அத்துடன் அவரின் அறிகுறிகள் மேம்பட்டு 24 மணி நேரத்துக்கும் மேலாகின்றது, (குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு இருந்தால் 48 மணி நேரங்களுக்கு மேல்). குறிப்பு: விரைவான ஆன்டிஜென் சோதனை முறை மூலம் எதிர்மறையாகச் சோதிக்கப்படுவது பிள்ளை/மாணவர், சிறுவர் பராமரிப்பகம்/பாடசாலைக்குத் திரும்பிச் செல்வதற்குரிய ஆதாரமாக அமையாது.

- ☐ எனது பிள்ளைக்கு COVID-19 சோதனை செய்யப்படவில்லை, ஆனால் அறிகுறி(கள்) தொடங்கியதிலிருந்து 10 நாட்களுக்கான சுய-தனிமைப்படுத்தலை அவர் முடித்துவிட்டார். எனது பிள்ளைக்குக் காய்ச்சல் இல்லை (மருந்துகளைப் பயன்படுத்தாமலேயே) மற்றும் அவரது அறிகுறிகள் குறைந்தது 24 மணி நேரமாக நன்கு தேறி வருகின்றன (குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு இருந்தால் 48 மணி நேரங்கள்).

- ☐ PCR சோதனை மூலம் சோதிக்கப்பட்டபோது எனது பிள்ளைக்கு COVID-19 இருப்பதாக அறிந்ததுடன், அறிகுறி(கள்) தொடங்கியதிலிருந்து (அல்லது சோதனை செய்யப்பட்டதிலிருந்து) 10 நாட்களுக்கான சுய-தனிமைப்படுத்தலை அவர் முடித்துவிட்டார். எனது பிள்ளைக்குக் காய்ச்சல் இல்லை (மருந்துகளைப் பயன்படுத்தாமலேயே) மற்றும் அவரது அறிகுறிகள் குறைந்தது 24 மணி நேரமாகத் தேறி வருகின்றன.

- ☐ எனது பிள்ளைக்கு COVID-19 இல்லை என்பதையும், COVID-19 உடன் தொடர்பற்ற ஒரு நிலைமையைக் கண்டறிந்தததாகவும் சுகாதார வழங்குநர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். அவரது அறிகுறிகள் 24 மணி நேரத்திற்கும் மேலாக மேம்பட்டு வருகின்றன (குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு இருந்தால் 48 மணி நேரங்களுக்கு மேல்).

- ☐ எனது பிள்ளை வேறு காரணங்களினால் சிறுவர் பராமரிப்பகம்/பாடசாலைக்குச் செல்லவில்லை. எனது பிள்ளைக்கு சுவாசத் தொற்றுக்குரிய அறிகுறிகள் உட்பட சுகவீனத்தின் எந்த அறிகுறிகளும் இல்லாது நலமாக இருக்கின்றார்.

### எனது வீட்டில் வசிக்கும் ஒருவர் (உதாரணமாக. பெற்றோர், சகோதரர்) COVID-19 அறிகுறிகளால் பாதிக்கப்பட்டனர்:

- ☐ எம்முடன் ஒரே வீட்டில் வசிப்பவருக்கு COVID-19 க்குரிய PCR சோதனை மூலம் சோதித்தபோது எதிர்மறையாகக் காட்டியது. எனவே எனது பிள்ளை (மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்) தற்போது சிறுவர் பராமரிப்பகம்/பாடசாலைக்குத் திரும்பிச் செல்ல முடியும்.

- ☐ எம்முடன் ஒரே வீட்டில் வசிப்பவருக்கு COVID-19 இல்லை என்பதையும், COVID-19 உடன் தொடர்பற்ற ஒரு நிலைமையைக் கண்டறிந்ததாகவும் சுகாதார வழங்குநர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். அவரது அறிகுறிகள் 24 மணி நேரத்துக்கும் மேலாக மேம்பட்டு வருகின்றன. எனவே எனது பிள்ளை (மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்) தற்போது சிறுவர் பராமரிப்பகம்/பாடசாலைக்குத் திரும்பிச் செல்ல முடியும்.

- ☐ எம்முடன் ஒரே வீட்டில் வசிப்பவருக்கு COVID-19 சோதனை செய்யப்படவில்லை, ஆனால் எனது பிள்ளை (மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்) 10 நாட்களுக்கான சுய-தனிமைப்படுத்தலை முடித்துவிட்டார். எனது பிள்ளை எந்த அறிகுறிகளும் இல்லாமல் நலமாக இருக்கின்றார்.

### COVID-19 க்கு நேர்மறையாகச் சோதிக்கப்பட்ட ஒருவருடன் நெருக்கமாகப் பழகியிருத்தல்:

- ☐ எனது பிள்ளை COVID-19 க்கு நேர்மறையாகச் சோதிக்கப்பட்டு 10 நாட்களுக்கான சுய-தனிமைப்படுத்தலை முடித்த ஒருவரின் நெருங்கிய தொடர்பாளராக இருந்துள்ளார். எனது பிள்ளை தற்போது எந்த அறிகுறிகளும் இல்லாமல் நலமாக இருக்கின்றார்.

- ☐ எனது பிள்ளை COVID-19 க்கு நேர்மறையாகச் சோதிக்கப்பட்ட ஒருவரின் நெருங்கிய தொடர்பாளராக இருந்துள்ளார். எனது பிள்ளை தடுப்பூசியை முழுமையாகப் பெற்றுக் கொண்டவர்*. தற்போது எனது பிள்ளை எந்த அறிகுறிகளும் இல்லாமல் நலமாக இருக்கின்றார்.

- ☐ எனது பிள்ளை COVID-19 க்கு நேர்மறையாகச் சோதிக்கப்பட்ட ஒருவரின் நெருங்கிய தொடர்பாளராக இருந்துள்ளார். எனது பிள்ளை கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாகச் சோதிக்கப்பட்டுக் குணமடைந்துள்ளதாக பொது சுகாதாரத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளார். எனது பிள்ளை எந்த அறிகுறிகளும் இல்லாமல் நலமாக இருக்கின்றார்.

### சமீபத்தில் கனடாவுக்கு வெளியே செய்த பயணம்:

☐ எனது பிள்ளை கனடாவுக்கு வெளியே பயணம் சென்று திரும்பியுள்ளார். பயண தனிமைப்படுத்தலின் காலமாகிய 14 நாட்களுக்கு எனது பிள்ளை வீட்டிலேயே தங்கியிருந்ததுடன் வேண்டப்பட்ட சோதனையையும் செய்துள்ளார். .எனது பிள்ளை அறிகுறிகள் எதுவுமின்றி நலமாக இருக்கின்றார்.

☐ எனது பிள்ளை கனடாவுக்கு வெளியே பயணம் சென்று திரும்பியுள்ளார். எனது பிள்ளை கனடாவுக்குள் நுழைவதற்கு முன்னரே அவரது தடுப்பூசியை முழுமையாகப் பெற்றுக் கொண்டவர்* வேண்டப்பட்ட சோதனையையும் செய்துள்ளார். எனது பிள்ளை அறிகுறிகள் எதுவுமின்றி நலமாக இருக்கின்றார்.

COVID-19 சோதனை செய்த திகதி *(பொருந்துமெனின்):*

_______________________________ (*தினம்/ மாதம்/ வருடம்*)

**எனது பிள்ளை தற்போது நலமாகவும் சிறுவர் பராமரிப்பகம்/ பாடசாலைக்குத் திரும்பிச் செல்லக்கூடிய நிலையில் இருப்பதாகவும் நான் அறியத்தருகின்றேன்.**

பெற்றார்/பாதுகாவலர் பெயர்: _______________________________________________

கையொப்பம்: _______________________ திகதி: _____________ (*தினம்/ மாதம்/ வருடம்*)

*Fully vaccinated (முழுமையான தடுப்பூசிப் பாதுகாப்பு) என்பது COVID-19 தடுப்பூசித் தொடர் ஒன்றில் இரண்டாவது டோஸைப் பெற்ற 14 அல்லது அதற்கு மேலான நாட்களின் பின்னர் அல்லது ஒன்ராறியோ சுகாதார அமைச்சால் வரையறுக்கப்படுவதன்படி எனக் கருதப்படுகின்றது.

பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை சிறுவர் பராமரிப்பகம்/தினமுகாம் செயலாளர் அல்லது உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபரிடம் கையளிக்கவும்.

*தயவுசெய்து கவனிக்கவும்: இந்தப் படிவத்தை ஏற்றுக்கொள்வதும் பயன்படுத்துவதும் ஒவ்வொரு செயலாளரை/பாடசாலையை/பாடசாலைச் சபையின் தீர்மானத்தைப் பொறுத்தது.*